[illegible]
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 வைகாசி 06 செவ்வாய்க்கிழமை (20-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 173

## மல்லாகம் சம்பவத்துக்கு மன்னிப்பு கோருகிறார் ஜெனரல் பலகல்ல!

யாழ்ப்பாணம், மே 20

மல்லாகத்தில் கடந்த வியாழனன்று நான்கு படையினரும் சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டதை அடுத்து பொதுமக்கள் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து யாழ்ப்பாணப் பொதுமக்களிடம் — குறிப்பாக அச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்களிடம் — இராணுவத்தின் சார்பில் தமது ஆழ்ந்த கவலையை வெளியிட்டு, மிகப் பணிவுடன் மன்னிப்புக் கோரியிருக்கின்றார் ஸ்ரீலங்கா இராணுவத்தின் 51 ஆவது படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்ல.

இது தொடர்பாக அவரது அலுவலகத்திலிருந்து விடுக்கப்பட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

சுன்னாகத்தில் இம்மாதம் 15 ஆம் திகதி பொதுமக்கள் தாக்கப்பட்டது

( 8 ஆம் பக்கம் பார்க்க )

# அடுத்த நகர்வுக்காக மேலும் படை குவிப்பு!

## இதுவரை நடந்த சண்டைகளில் அதிகாரிகள் தரத்தில் அதிக இழப்பு

கொழும்பு, மே 20

**ஓமந்தைப் பகுதியிலும், நெடுங்கேணியிலும் நிலை கொண்டுள்ள படைகளுக்கு உதவியாக கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் இருந்து நூற்றுக்கணக்கான படையினர் போர்முனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை 10 காலாட்படை அணிகள் வவுனியாவுக்குக் கொண்டு வரப்பட்டு அங்கிருந்து போர் முனைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

இவர்கள் வவுனியா வர முன்னர் அநுராதபுரத்தில் உள்ள ஒரு புத்த விகாரையில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்ததாகவும் — வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

படையினர் எதிர்பார்க்காத விதத்தில் புலிகளின் எதிர்ப்பு அதிகமாக இருப்பதே புதிதாகப் படைகள் அனுப்பப்படுவதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதுவரை நடைபெற்ற சண்டைகளில் அதிகாரிகள் தரத்தில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். காயம் அடைந்தவர்களும் அதிகம்.

நேற்றுவரை நடைபெற்ற சண்டைகளில் லெப்டினன்ட் கேணல் ஒருவரும், மேஜர்கள் இருவரும், கப்டன்கள் மூவரும், லெப்டினன்ட்கள் ஐவரும், 2 ஆம் லெப்டினன்ட்கள் ஏழு பேரும் காயமடைந்தனர் என்று நேற்றிரவு வெளியான அரச தரப்புச் செய்தி

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆட்லறிகளாலேயே படையினருக்கு இழப்பு அதிகம்

கொழும்பு, மே 20

முல்லைத்தீவு, புளுக்குணாவ முகாம்கள் மீதான தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆட்லறிகளை புலிகள் 'வெற்றி உறுதி' படை நடவடிக்கைத் துருப்புகளுக்கு எதிராகப் பயன்படுத்தி வருகின்றனர். இதனாலேயே படையினருக்கு உயிரிழப்புக்களும், சேதங்களும் அதிகரித்துள்ளன.

கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''த ஐலண்ட்'' பத்திரிகை மேற்கண்டவாறு தகவல் வெளியிட்டுள்ளது.

தற்போதைய தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் 122 எம்.எம். ஆட்லறிகள் இரண்டையும், —

85 எம். எம். ஆட்லறி ஒன்றையும் —

60 எம்.எம்., 81 எம்.எம்., 120 எம்.எம். மோட்டார்களையும் — பயன்படுத்தி வரு

(8ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணி கைப்பற்றப்பட்ட போது பொதுமக்கள் அங்கு இருக்கவில்லை

### ஏற்கனவே இடம்பெயர்ந்திருந்தனர்

நெடுங்கேணியைப் படையினர் கைப்பற்றுவதற்கு முன்பே அங்கு வாழ்ந்த 4 ஆயிரம் பொதுமக்களும் இடம்பெயர்ந்துவிட்டனர்.

இப்படிக் கொழும்புப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வவுனியாவில் இருந்து 30 மைல் தொலைவில் உள்ள நெடுங்கேணிப் பகுதியை படையினர் கைப்பற்றிய போது அங்கு மக்கள் இருக்கவில்லை. அப்பிரதேச [illegible] அரசாங்க அதிபர் ஐயம்பிள்ளையும் அந்தநேரம் கொழும்பில் இருந்தார்.

தாக்குதலின்போது அப்பகுதியில் இருந்த பெருந்தொகையான கட்டடங்கள் சேதமடைந்தன.

மக்கள் நடமாட்டமற்ற [illegible] படையினரால் [illegible]

இப்படி அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

## ஓமந்தையில் நேற்று மாலை மீண்டும் சண்டை மூண்டது

வவுனியா, மே 20

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கையில் ஞாயிற்றுக்கிழமை பிற்பகலில் இருந்து சிறிது அமைதி நிலவிய போதும் நேற்று மாலை 5.00 மணியளவில் இரு தரப்பினருக்கும் இடையில் மீண்டும் மோதல் வெடித்ததாக வவுனியா செய்தியாளர் நேற்றிரவு அறிவித்தார்.

ஓமந்தைப் பகுதியைக் கைப்பற்றிய படையினர் அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்துவதில் ஈடுபட்டுள்ள அதேவேளையில் நேற்று பிற்பகல் வெடித்த

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிப்பகுதியில் மற்றொரு போர் முனை திறக்கப்படலாம்

கொழும்பு, மே 20

வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் ஊடாக நகர்ந்து ஓமந்தையையும் —

வெலிஓயா – ஜானகபுரத்திலிருந்து நகர்ந்து நெடுங்கேணியையும் — படையினர் கைப்பற்றியுள்ள இவ்வேளையில் மற்றொரு போர் முனை திறக்கப்படலாம் என்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கிளிநொச்சியில் படையினர் குவிக்கப்பட்டு வருவதும் —

கிளிநொச்சியில் இருந்து தெற்கே புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை நோக்கிப் படையினர் ஆட்லறித் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதுமே இந்த ஊகங்களுக்குக் காரணம் ஆகும்.

கிளிநொச்சி முகாமில் இருந்து நேற்றும், நேற்று முன்தினமும் வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளை நோக்கி படையினர் கடும் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தி உள்ளனர்.

அதே சமயம் கிளிநொச்சியிலிருந்து ஆரம்பிக்கப்படக்கூடிய எந்த ஒரு படைநகர்வையும் எதிர்கொள்ள புலிகள் தயார் நிலையில் இருப்பதாக தகவல்கள் தெரிவிப்பதாக ''த ஐலண்ட்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டது.

(இ 3-10-21-164)

## புலிகளை திசை திருப்பவா நெடுங்கேணி நடவடிக்கை?

வவுனியா, மே 20

வெலிஓயா ஜானகபுரவில் இருந்து முன்னேறி நெடுங்கேணிப் பகுதிக்கு வந்துள்ள படையணியினர் எந்நேரமும் வாபஸ் பெறப்படலாம் என்று நேற்று வவுனியாவில் பேசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இரு முனைகளில் முன்னேறி புலிகளைப் பலவீனப்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம் என்றும் —

ஓமந்தையில் உள்ள படையணிகளுடன் சேரும் வகையில் நெடுங்கேணியில் இருந்து படையினர் வாபஸ் பெறப்படலாம் என்றும் — வவுனியா படை வட்டாரங்களில் இருந்து அறிய வருவதாக வவுனியா செய்தியாளர் தெரிவித்தார்.

(இ-3-164)

## படை நடவடிக்கை ஆரம்பித்த பின் வன்னியிலிருந்துவந்த அம்புலன்ஸ்

வவுனியா, மே 20

வவுனியாவில் இருந்து வடக்கு நோக்கி இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ள போதும், வன்னியில் இருந்து ஓர் அம்புலன்ஸ் முதன் முதலாக நேற்று இரு நோயாளர்களுடன் வவுனியா வந்து சேர்ந்தது.

வவுனியா — மன்னார் வீதி வழியாக இந்த அம்புலன்ஸ் வவுனியா வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாங்குளம், ஸ்கந்தபுரம் பகுதிகள் அமைதியாக இருப்பதாக அம்புலன்ஸில் வந்தவர்கள் வவுனியாவில் தெரிவித்தனர்.

அதேவேளை — இராணுவ

(8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

### புலிகள் தாக்கலாம் என அச்சம்

கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

நகருக்குள் பிரவேசிக்கும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் குறித்து அவதானமாக இருக்குமாறு பொலீஸார் கேட்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு நகருக்கு வெளியேயும் பரிசோதனை நிலையங்கள், வீதித்தடைகள் ஆகியவற்றில் திடீர் சோதனைகள் நடத்தப்படுவதாக பிராந்திய பொலீஸ்மா அதிபர் டி.எம்.ரி.வி. திஸநாயக்க தெரிவித்தார்.

புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இவ் வேளையில் சந்தேகத்துக்குரிய நபர்களின் பொதிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்குமாறு மக்கள் கேட்கப்பட்டுள்ளனர். (மற்றும் ஒரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

(இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 2 இந்திய மீனவர் கொல்லப்பட்டது குறித்து இந்தியா கவலை தெரிவிப்பு

## இலங்கையிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது

புதுடில்லி, மே 20

இரு இந்திய மீனவர்கள் சென்றவாரம் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டது குறித்து இந்தியா கவலை தெரிவித்துள்ளது.

இத்தகைய வன்முறைச் செயல்கள் இனியும் நேராமல் தவிர்க்கப்பட வேண்டும் என இந்தியா கேட்டுள்ளது.

இந்த விடயம் இலங்கை அதிகாரிகளிடம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது என நேற்று புதுடில்லியில் வெளியான வெளிவிவகார அமைச்சுச் செய்திக்குறிப்பு தெரிவித்தது.

இது தொடர்பான விவரமான சில விளக்கங்கள் இலங்கையிடம் கோரப்பட்டுள்ளதாகவும் — இலங்கையின் நீர்ப்பிரதேசத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்பதை இலங்கை ஒப்புக்கொண்டதாகவும் — அந்தக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் தலைமன்னார் கடற்படைத் தளத்துக்கு அருகே விடுக்கப்பட்ட எச்சரிக்கைகளுக்கு இந்திய மீன்பிடிக்கலத்தில் இருந்தவர்கள் செவிசாய்க்காது போனதையடுத்தே படையினர் சுட நேரிட்டதாகவும் —

இத்துப்பாக்கிச் சூட்டில் படகு வெடித்து விட்டதாகவும் — இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் இரு மீனவர்கள் கொல்லப்பட்டனர்; 3 பேர் காவலில் வைக்கப்பட்டார்கள்

இந்த மூன்று பேரும் இன்று இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படவுள்ளனா. (இ-3)

# இராணுவ பேச்சாளராக மீண்டும் சரத் முனசிங்க!

இராணுவப் பேச்சாளராக பிரிகேடியர் சரத் முனசிங்க மீண்டும் இன்று பதவியேற்கவிருக்கிறார்.

மாலைதீவில் இடம்பெற்ற ''சார்க்'' மாநாட்டில் கலந்துகொண்டு நாடு திரும்பியவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்தவுக்கு விடுத்த பணிப்பின் பேரிலேயே சரத் முனசிங்க இராணுவப் பேச்சாளராக மீண்டும் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அத்துடன் இவர் பாதுகாப்பு அமைச்சு செயற்பாட்டு தலைமையகப் பொதுசனத் துறை பணிப்பாளராகவும் பதவி ஏற்கிறார்.

முன்னர் இராணுவப் பேச்சாளராக இருந்த இவர் பின்னர், கிழக்கு மாகாண கட்டளை அதிகாரியாக இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார்.

இவரது இடத்துக்கு தற்போது கிழக்கு மாகாண கட்டளை அதிகாரியாக — தற்காலிகமாக — பிரிகேடியர் அன்ரன் விஜேந்திரா நியமிக்கப் பட்டிருக்கின்றார். (உ-150-3)

## தமிழ் மொழித்திறன் போட்டிகள்

அச்சுவேலி, மே 20

கோப்பாய் கல்விக்கோட்டப் பாடசாலைகளின் 'தமிழ் மொழித்திறன்' போட்டிகள் 21 ஆம் 22 ஆம் திகதிகளில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. இராசேந்திரம் தலைமையில் போட்டிகள் நடைபெறும். (இ-11)

## ஓய்வூதியம்

குருநகர், மே 20

யாழ் பிரதேச செயலகத்தின் மூலம் ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பெற விண்ணப்பித்தவர்களின் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். பிரதேச செயலகம் மூலம் தெரிய வருகின்றது.

1996 டிசம்பர் மாதம் இளைப்பாறியுள்ளவர்களில் சிலரின் ஓய்வூதியம் தொடர்பான கடிதங்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது. (இ-51)

## கடிதங்கள் குறித்து அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 20

விபூதி, நூல்கள் போன்ற பொருள்கள் வைத்து அனுப்பப்படும் கடிதங்கள் சோதனையின்போது உடைக்கப்பட்டு அவை கிழித்து வீசப்படுவது தற்போதும் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகையால் கடிதங்களை அனுப்புவோர் இவ்வாறான பொருள்களை வைத்து அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் கேட்டுள்வார். (இ-4)

## திருக்கோவையார் நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 20

திருநெறிய தெய்வீக மாநாட்டு மலரான திருக்கோவையார் நூல் வெளியீட்டு விழா நாளை புதன் கிழமை முற்பகல் 9 மணி முதல் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி விழாவுக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் மங்கள விளக்கேற்றுவார்.

குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

வெளியீட்டுரையை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும், சிறப்புரைகளை யாழ். பிரதேச செயலாளர் து. வைத்திலிங்கம், திரு. க. சிவராமலிங்கம் ஆகியோரும் வழங்குவர்.

யாழ். ப. நோ. கூ. சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் முதற் பிரதியைப் பெறுவார். (ஐ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 20

காரைநகர் திக்கரை முருகன் ஆலயத்தில் நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு வைகாசி விசாகத் திருவிழா நடைபெறும். (ஐ)

★ ★ ★

வண்ணை வடமேற்கு அண்ணாமார் களனிப்பதி ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி மூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் கடந்த 13 ஆம் திகதி ஆரம்பமானது. இன்று மாலை சப்பறத்திருவிழா, நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் காலை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ ஞானப்பழனி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று காலை நடைபெறவுள்ளது. 8மணிக்கு வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து 9 மணிக்கு சுவாமி தேருக்கு எழுந்தருளுவார். நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். (ஐ)

★ ★ ★

அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் நாளை முற்பகல் 11 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஐ - 4)

நல்லூர் நாயன்மார்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகர் ஆலய மணவாளக் கோல சங்காபிஷேகம் இன்று முற்பகல் 10 மணிமுதல் ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

வல்வெட்டி வேவில் ஸ்ரீ வீரகத்தி விக்னேஸ்வர சுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கும்— நாளை மறுதினம் காலை வல்வை ஊறணி சமுத்திரத்தில் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

புங்குடுதீவு புனித சவேரியார் ஆலயத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகி திருச்சொரூப ஆசீருடன் நடைபெறும். (ஐ -4)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி கோயில் மஹோற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9மணி முதல் நடைபெறும் நாளை காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் (ஐ)

★ ★ ★

கன்னாதிட்டி ஸ்ரீ காளியம்பாள் ஆலய அந்தரீத பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் நடைபெறவுள்ளது. (ஐ-30)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் வைகாசி விசாகத் தினத்தை முன்னிட்டு நாளை புதன் கிழமை மாலை 5 மணிக்கு பொங்கலும் விசேட பூசையும் இடம் பெறும். (ஐ-154)

# வாழ்த்துகின்றோம்

யா/ மானிப்பாய்

செ.ன். ஆன்ஸ் றோ.க.த.க.

பாடசாலையின்

அதிபராக இருந்து இன்று (20-05-97) இளைப்பாறும்

அருட்சகோதரி மேரி நிசெற்றா

அவர்களை பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்தி

புதிய அதிபராகப் பதவியேற்கும் அருட்சகோதரி

மேரி தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ்

அவர்களையும் வருக வருகவென வரவேற்கின்றோம்.

அபிராமி சைக்கிள் பலஸ்

பிரதான வீதி, மானிப்பாய்.

(47044)

# வாழ்த்துகின்றோம்

யா/மானிப்பாய்

செ.ன். ஆன்ஸ் றோ.க.த.க.

பாடசாலையின்

அதிபராக இருந்து இன்று (20 - 05 - 97) இளைப்பாறும்

அருட்சகோதரி மேரி நிசெற்றா

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன்

புதிய அதிபராகப் பதவியேற்கும்

அருட்சகோதரி

மேரி தஸ்நேவிஸ் லடிஸ்லாஸ்

அவர்களை வருக வருக என வரவேற்கின்றோம்.

(சி/750) பழைய மாணவர்கள்

# பாராட்டுகின்றோம்

யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான

சதுரங்கச் சுற்றுப் போட்டியில்

பங்குபற்றிய சகல பாடசாலை அணிகளையும் வெற்றி கொண்ட

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி

சதுரங்க வீரர்களையும் வீராங்கனைகளையும்

வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், பழையமாணவர்,

மகாஜனக் கல்லூரி.

(47229)

# மரண அறிவித்தல்கள்

## மீனாட்சி வெற்றிவேலு

(முன்னாள் அதிபர் யா / கரவெட்டி சரஸ்வதி வித்தியாலயம்)

மீனாட்சி வெற்றிவேலு 18 - 05 - 1997 இரவு 10 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

இவர் கரணவாய் கிழக்கு முருகேசு — இலட்சுமி தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற செல்வி பார்வதி முருகேசு மற்றும் திருமதி செல்லம்மா குமாரசாமி (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரியும். காலஞ்சென்ற கு குகபிரசாத், கு. குகதாசன் (பொறியியலாளர் ஆஸ்திரேலியா), திருமதி குகலோசனா சோதிலிங்கம் ஆகியோரின் பெரியதாயாரும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற அதிபர் மா. குமாரசாமி, க. கதிரித்தம்பி ஆகியோரின் மைத்துனியும், க. கமலேஸ்வரியின் பெரிய தாயாரும், இந்திரகுமார், தவக்குமார், விஜயகுமார், வசந்தி, சௌந்தராதேவி ஆகியோரின் ஒன்றுவிட்ட பெரிய தாயாரும், திருமதி கு. இராசமணி, திரு. A. சோதிலிங்கம் (பொறியியலாளர், காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை), திருமதி குகதாசன் ஆகியோரின் மாமியாரும், பிரமிளா, பிரேம்குமார், பிரதாபன், ஜெயசங்கர், கிரிசாந்தி, ரவிசங்கர், தணிகாசலம், கிருபாகரன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19 - 05 - 97 திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் கரவெட்டி சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
திருமதி செ. குமாரசாமி
(சகோதரி)

''வெற்றிவேல் வாசா''
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.

(சி/748)

## சிவதாசர் சிவகுமார்

(மண்பரிசோதகர், நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம்—முல்லைத்தீவு)

தம்பசிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொக்குவிலில் வசித்து வந்தவருமாகிய சிவதாசர் சிவகுமார் 19- 05- 97 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் செல்வராணியின் அன்புக்கணவரும், லாவண்யா, சௌமியா (யாழ். இந்துமகளிர் கல்லூரி) கஜகர்ணீகன் (யாழ் இந்துக்கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், சிவபாலனின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் உரும்பிராய் கிழக்குகில் (கரந்தனில்) வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று 20- 05- 97 இல் காலை 11. 00 மணிக்கு புன்னாலைக் கட்டுவன் தெற்கு விலங்கன் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்!
மனைவி, பிள்ளைகள்.

பாலஸ்ரீ
(அருந்தவரத்தினம்)
பூதராயர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

(47043)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ மேற்குக் கரையில் அமைக்கப்பட்ட

# பலஸ்தீனக் குடியிருப்புகளை இடித்துவிட இஸ்ரேல் முடிவு!

ரெல் அவிவ், மே 20

மேற்குக் கரைப் பகுதிகளில் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ள பலஸ்தீனியருக்குச் சொந்தமான கட்டடங்களை இடித்துவிடப்போவதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

சுமார் 500 வரையான கட்டடங்களை இடித்துவிடப் போவதாக இஸ்ரேலிய அரசு தெரிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட அரபு கிழக்கு ஜெருஸலேமில் இஸ்ரேல் யூதக் குடியிருப்புக்களை அமைக்க ஆரம்பித்ததை அடுத்து தடைப்பட்டுப் போயுள்ள மத்திய கிழக்கு சமாதான முயற்சிகள் இஸ்ரேலியரின் தற்போதைய புதிய அறிவிப்பினால் முறிவடைந்து போகும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

சமாதானத்தை மீட்டெடுக்கும் முயற்சியாகமத்திய கிழக்குக்கான அமெரிக்கப் பிரதிநிதி 9 நாள்களாக மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தோல்வி கண்டதைத் தொடர்ந்து பலஸ்தீனியர்களின் கட்டடங்களை இடிக்கப்போவதான அறிவிப்பு இஸ்ரேலில் இருந்து வெளியாகியுள்ளது.

பலஸ்தீனியர்கள் தங்களது இந்தக் குடியிருப்புக்களை ஆதாரமாகக் காட்டி அப்பகுதியைத் தங்களது பூர்வீகப் பிரதேசமாக்கிக்கொண்டு விடுவதைத் தடுக்கும் உள்நோக்கத்துடனேயே பிரதமர் நத்தனியாகு இந்த முயற்சியில் இறங்கியுள்ளார் என அவதானிகள் தெரிவித்தனர். (ஐ)

# கின்ஸாசாவில் 200 சடலங்கள் மீட்பு!

கின்ஸாசா, மே 20

லோறன் கபீலா தலைமையிலான கிளர்ச்சிப் படைகள் தலைநகர் கின்ஸாசாவினுள் பிரவேசித்த சமயம் அங்கு உயிரிழந்ததாகக் கூறப்படும் 200 பேரின் சடலங்களை செஞ்சிலுவைச் சங்கம் மீட்டுள்ளது.

இதேவேளை அரசியல் மற்றும் இராணுவ அதிகாரங்கள் முழுமையாக கிளர்ச்சியாளர் வசமாகி விட்டதைத் தொடர்ந்து கின்ஸாசா வீதிகளில் பொதுமக்கள் கிளர்ச்சிப் படையினருடன் சேர்ந்து ஆடிப்பாடி தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

தென்னாபிரிக்க துணை அதிபர் லுபும்பாஸிக்குச் சென்று அதிபர் லோறன் கபீலாவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

கரகோஷம் செய்து கிளர்ச்சியாளர்களை வரவேற்க வீதிகளில் திரண்ட மக்கள் கும்பல்கள் சில இடங்களில் அதிபர் முபுட்டுவுக்குச் சொந்தமான சொத்துக்களைச் சூறையாடியுள்ளன. (ஐ)

# மங்கோலியாவில் கம்யூனிஸ்ட் அதிபர்

## தேர்தலில் பெரு வெற்றி

உலன்பதோர், மே 20

மங்கோலியாவில் நடந்த அதிபர் தேர்தலில் எதிர்க்கட்சியான கம்யூனிஸ் கட்சி உறுப்பினர் பெரு வெற்றியீட்டியுள்ளார்.

எதிர்க்கட்சியான மக்கள் புரட்சிக் கட்சியின் தலைவர் நாட்சக்கினிபகவதி மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த ஒரு வருடத்துக்கு முன்பு பதவிக்கு வந்த ஜனநாயகக் கட்சிக்குஅதிருப்தியை இத்தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. (ஐ)

# மூவர் போட்டி

சென்னை, மே 20

இந்திய தேசிய காங்கிரஸின் தமிழ் நாடு பிரிவின தலைவர் பதவிக்கு எதிர்வரும் ஜூன் 9 ஆம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. தலைவர் பதவிக்கு இம்முறை தங்கபாலு, குமரி அனந்தன், வாழப்பாடி ராமமூர்த்தி ஆகியோர் போட்டியிடவுள்ளனர். (ஐ)

# பங்களாதேஷில் சூறாவளி அபாயம்

டாக்கா, மே 20

பங்களாதேஷ் நாட்டைப் பெரும் சூறாவளி தாக்கலாம் என்று எதிர்வு கூறப்பட்டிருப்பதை அடுத்து லட்சக்கணக்கான மக்கள் பாதுகாப்பான பகுதிகளுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சூறாவளி தாக்கக்கூடிய பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றுவதில் செம்பிறைச் சங்கம் மற்றும் தொண்டர் அமைப்புகளைச் சேர்ந்த 33 ஆயிரம் பேர் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் ஷேக் ஹசீனா தனது வெளிநாட்டுப் பயணத்தை ரத்துச் செய்துள்ளார்.

சிட்டாகொங் துறைமுகம் மூடப்பட்டுள்ளது. (ஐ)

# விசேட அ.அட்டை வழங்குதலை விரைவாகப் பூர்த்தி செய்ய ஏற்பாடு

## விண்ணப்பங்களை உடன் சேர்க்குமாறு பணிப்பு

யாழ்ப்பாணம், மே 20

யாழ். செயலகத்தில் இயங்கும் விசேட அடையாள அட்டைப்பிரிவு இம்மாதம் 31 ஆம் திகதியுடன் அதன் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளவுள்ளதாக அதன் செயற்றிட்ட முகாமையாளர் திருலிங்கநாதன் தெரிவித்தார்.

பணிகளை மேற்குறிப்பிட்ட திகதிக்குள் முடித்துக் கொள்ள திவசயாக இன்னமும் சுமார் 20 ஆயிரம் விண்ணப்பங்களை பிரதேச செயலகங்கள் மூலம் பெறவேண்டி உள்ளதாகவும்—

10 ஆயிரம் பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் பெறவேண்டி உள்ளதாகவும் —அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் வன்னி மற்றும் ஏனைய பகுதிகளிலிருந்து அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ள சுமார் 15 ஆயிரம் பேரின் விண்ணப்பங்களும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அடையாள அட்டை விநியோகப் பணியை துரிதகெதியில் முடிக்க வசதியாக பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விசேட அடையாள அட்டை பெறுவதற்காக விண்ணப்பிப்போரது விண்ணப்பங்களை உடனடியாகவே யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்களையும், உதவி அரசாங்க அதிபர்களையும் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கேட்டுள்ளார். (ஐ-5)

# காசோலை கிடைக்கவில்லை

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் மே மாத ஓய்வூதிய வவுச்சர்கள் ஓய்வூதியர்களுக்கு கிடைத்துள்ள போதிலும் உரிய காசோலைகள் வங்கிகளுக்கு வந்துசேராததால் ஓய்வூதியத்தினைப் பெற முடியாதுள்ளதாக ஓய்வூதியர் தெரிவித்தனர்.

உள்ளூராட்சியைச் சேர்ந்த விதவைகளுக்கான ஓய்வூதியத்திற்குரிய காசோலைகள் மட்டும் வங்கிகளுக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ- 117)

# பதிவு செய்யப்படாத கண் நோய் மருந்து

## யாழ். மருந்தகங்களில் மீட்பு!

திருநெல்வேலி, மே 20

இலங்கையில் விற்பனைக்கு அனுமதிக்கப்படாத கண் நோய்களுக்குப் பயன்படுத்தப்படும் 'ரியூப்' மருந்து (Chloramphanicol Eye Oinment) யாழ். நகரில் உள்ள மருந்தகங்களில்நடத்தப்பட்ட திடீர்ப் பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கப்பட்டது.

சீனாவில் தயாரிக்கப்படும் இந்த மருந்து இலங்கையில் பதிவு செய்யப்படவில்லை.

நாட்டில் இந்த மருந்து விற்பனை செய்யப்பட்டு வருவதை சுட்டிக்காட்டி அது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பில் உள்ள ஒப்பனை சாதனங்கள் உபாயங்கள், ஔடதங்கள் அதிகாரசபை யாழ். சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவித்திருந்தது.

இதனையடுத்து யாழ். நாவட்ட உணவு மருந்துப் பரிசோதகர் ரி மகாதேவன் கடந்த வெள்ளியன்று யாழ் நகரில் உள்ள தனியார் மருந்தகங்களில் திடீர் சோதனை மேற்கொண்ட போதே மேற்படி கண் மருந்து கண்டுபிடிக்கப்பட்டது. உடனடியாகவே அவை பறிமுதல் செய்யப்பட்டன.

விற்பனைக்கு விடப்படும் சகல மருந்து வகைகளும் கொழும்பில் உள்ள மருந்து அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டவையாக இருக்க வேண்டும் என்றும் —

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட முத்திரை இல்லாத மருந்து வகைகளை விற்பனை செய்வது சட்டவிரோதமானது என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-135)

# சிறுபோகத்துக்கு தயாராகும் விவசாயிகளுக்கு யாழ். அரச அதிபர் விடுக்கும் அறிவுறுத்தல்கள்

எதிர்வரும் சிறுபோகச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்குச் சில அறிவுறுத்தல்களை வழங்கும் வகையில் யாழ். அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் விடுத்த செய்திக் குறிப்பு இங்கே பிரசுரமாகிறது.

தற்பொழுது வைகாசி மாதத்தில் ஆரம்பிக்கும் சிறுபோகத்தில் நீங்கள் விவசாயச் செய்கையில் ஈடுபடுவதற்கு முன்னர் உங்களைப் பாதிக்கும் சில அடிப்படை விடயங்களைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்.

தற்பொழுது உள்ள சூழ்நிலையில் அதாவது மீளக் குடியமர்ந்த விவசாயிகளின் எண்ணிக்கை, விவசாய நிலம், விவசாயத்துக்குப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்ற கிணற்று நீரின் அளவு என்பவற்றை கவனத்திற் கொண்டு 2 ஆயிரம் ஹெக்ரேயர் நிலம் மாத்திரமே செய்கை பண்ணப்படலாம்.

செய்கை பண்ணப்படுகின்ற பயிர்களைப் பொறுத்தவரை அவை தற்பொழுது இம்மாவட்டத்திலுள்ள 4,30,000 மக்களுக்கான மரக்கறித் தேவையை ஈடு செய்வதற்கு மாத்திரம் போதுமானதாகும்.

தேவைக்கு மேலதிகமாக உற்பத்திசெய்து கொழும்புக்கு அனுப்பக் கூடியதாக இருக்கின்ற ஒரேயொரு உற்பத்திப் பொருள் வெங்காயம் மட்டுமேயாகும்.

இந்நிலையில் இச் சிறுபோகத்திற்கு மிகக் கூடியளவு வெங்காயத்[illegible] பயிரிடத் தூண்டுவ[illegible]ளுக்குச் சிறந்தவருமானத்தை பெறுவதனை நிச்சயப்படுத்திக் கொள்வதோடு அதன் அடிப்படையை 1997 பெரும் போகத்திற்கான விதை வெங்காயத்தைச் சேமித்து வைப்பதற்கும் மேலதிக உற்பத்தியைக் கொழும்பிக்கு ஏற்றுமதி செய்வதற்கும், திட்டமிடுவதற்கும் உதவியாகமிருக்கும்.

இதன் அடிப்படையில் இக் இால போகத்தில் ஆயிரம் ஹெக்ரேயர் நிலத்தில் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்குச் சகல விவசாயிகளும் கவனம் எடுக்குமாறுகேட்டுக்கொள்கிறோம். அத்துடன் எமது மரக்கறித் தேவைக்கு 480 ஹெக்ரேயர் நிலம் மாத்திரம் பயிர் செய்தால் போதுமானது. இது மரக்கறியின் விலை வீழ்ச்சியை [illegible] செய்வதாக இருக்கும்.

மரக்கறிக்கான செய்கைப் பிரதேசங்களைத் தெரிவு செய்யும்போது சகல பிரதேசங்களிலும் நுகர்வோருக்குக் கிடைப்பதனையும் விநியோகத்தையும் நிச்சயப்படுத்துவதற்காக வடமராட்சி, தென்மராட்சி வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களில் செய்கை பண்ணலாம். இதற்கு யாழ். விவசாயப் பணிப்பாளரின் ஆலோசனையின் அடிப்படையில் விவசாயச் செய்கையில் ஈடுபடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மேலதிகமாக உள்ள விவசாயம் செய்யக்கூடிய காணிகளில் உப உணவு தானியப் பொருள்களான குரக்கன், பயறு, கௌபி ஆகிய பயிர்களையும் நிலக்கடலை, மரவள்ளி,இராசவள்ளி.கறணை, வற்றாளை ஆகியபயிர்களைப் பயிரிடுமாறும் ஆலோசனை கூற விரும்புகின்றேன்.

மேற்படி செயல் திட்டத்தை அமுல் படுத்துவதற்காக விதைவெங்காயத்தின் விலையை அதிஉச்சமாக கொழும்பிற்குச் செல்வதனை தடுப்பதற்காகவும் கூடிய விவசாயிகளை இவ்வெங்காயச் செய்கையில் ஈடுபட்டு நன்மை பெறுவதற்காகவும் தனது மாவடடத்தில் விவசாயிகளின் கையிருப்பில் உள்ள வெங்காயத்தின் அளவை கவனத்திற் கொண்டு சிறுபோக வெங்காயவிளைச்சல் கிடைக்கும் வரை வெங்காயத்தை கொழும்பிற்கு ஏற்றுமதி செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு வேண்டிய விதை தானியங்கள் விவசாயிகளுக்குக் கிடைப்பதற்கு கமநல சேவைகள் திணைக்களம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும். எனவே விவசாயப் பெருமக்கள் கூடிய இலாபம் அடைவதற்கு மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு கோட்டுக் கொள்கிறேன். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை விடுதலை விடுதலை
நோயிலிருந்து விடுதலை
பேயிலிருந்து விடுதலை
பாவத்திலிருந்து விடுதலை
சாபத்திலிருந்து விடுதலை
இயேசு தருகின்றார்

**சுவிஷேசக் கூட்டங்கள்**

இடம்: **சுண்டுக்குளி மகளிர் கல்லூரி**
காலம்: **21 - 05 - 97, 22 - 05 - 97**
நேரம்: **மாலை 3 மணி** (புதிய நேரம்)

செய்தி அளிப்பவர்:

**போதகர்: யோண் அன்ரனி**
திருகோணமலை

வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப்படும்
அனைவரும் வருக. (47033)


## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 02 — 1940
உதிர்வு: 30 — 05 — 1996

அமரர்
**சணபதிப்பிள்ளை சின்னத்துரை**
(முன்னாள் இ. போ. ச. நடத்துநர், கோண்டாவில்)

சிந்திய வியர்வையில் செழித்த மண் தாகத்தில்
நொந்திட்ட மனங்களோ தந்தையின் சோகத்தில்
வந்தித்தோம் உங்களுக்காக வாடியமலர்களாய்
சந்தன மரத்தின் கந்தம் அது சாய்ந்தாலும் வீசிடுமே

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஆறாத்துயருறும்:
**குடும்பத்தினர்.**

17, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர். (47032)

## ஆசிரியர் வங்கிக்கடன் திட்டம்

யாழ்ப்பாணம், மே 20

'குருசெத' ஆசிரியர் வங்கிக் கடன் திட்ட அங்குரார்ப்பண வைபவம் கடந்த மார்ச் மாதம் 19 திகதி யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. மக்கள் வங்கி நவீன சந்தைக் கிளை முகாமையாளர் ஆ. சிற்சபேசனும் இந்த வைபவத்தில் கலந்து கொண்டார்.

யாழ் மாவட்டத்தில் யாழ். இந்துக்கல்லூரியிலேயே முதன் முறையாக இத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலம் ஆசிரியர்கள் பலர் கடன் பெற்றுள்ளனர். (ஐ)

## விவசாயிகளுக்கு கோரிக்கை

வலிகாமம் தெற்கு, மே 20

கடந்த கால போகத்தின் போது உடுவில் கமநல சேவை நிலையத்தினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட 104 பெட்டி விதை உருளைக் கிழங்குக்கான பணம் இன்னமும் விவசாயிகளால் கமநல சேவை நிலையத்துக்கு திரும்பி வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பணத்தை விரைவாகச் செலுத்தும்படி உடுவில் கமநல சேவை பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் கேட்டுள்ளார். (ஐ-152)

## பெயர் மாற்றம்

கமநல சேவை நிலையங்களின் பெயர் ''கமநல கேந்திர நிலையம்'' என விவசாய திணைக்களத்தினால் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது,

பெயர் மாற்ற உத்தரவுக்கிணங்க கமநல சேவை நிலையங்களின் பெயர்ப் பலகைகள் கமநல கேந்திர நிலையம் என மாற்றப்பட்டுள்ளன. (ஐ-152)


சாவகச்சேரி விளைவேலி
**மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான**
**மகோற்சவ தேர் உற்சவம்**



அடியார்களுக்கு அருள்பாலிக்க எம்பெருமான் மருதடிவிநாயகர் நாளை புதன்கிழமை காலை 9-00 மணிக்கு தேரில் பவனி வருகின்றார்.

வியாழக்கிழமை (22 - 05 - 97) காலை 11-00 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

**ஆலய பிரதம குரு - சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
தலைமையில் நடைபெறும்.

**- பரிபாலன சபை**

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

விளம்பர அன்பளிப்பு:
**க. அருங்குணராசா**
**துர்க்கா ஸ்ரோர்ஸ்**
தானையம்பதி வீதி, சாவகச்சேரி.
(சி-743)



# நியூகோ என்டியூரன்ஸ்
# (NEWCO ENDURANCE)
## பிரயாணிகள் கப்பற் சேவை

**திருமலை - காங்கேசன்துறை, காங்கேசன்துறை - திருமலை**
**- வாரத்தில் இருதடவைகள் -**

**பிரயாணிகளுக்காக விசேடமான வசதிகள் அமைக்கப்பட்டுள்ளன.**

**தனிப்பட்ட இருக்கை வசதிகள்**
**இலவச காலைச் சிற்றுண்டி, இலவச காலைத் தேநீர்**

உணவு வகைகளை கொள்வனவு செய்வதற்கான சிற்றுண்டிச்சாலை யாவையும் உள்ளடக்கியதான வசதிகள் கொண்டது. பிரயாணிகளுக்கான பற்றுச்சீட்டைப் பெறும்போது "நியூகோ என்டியூரன்ஸ்" கப்பலுக்கான ரிக்கற் என்று கொள்வனவு செய்ய மறந்து விடாதீர்கள்!

**ஒரு வழிப்பயணம் - ரூபா 1,000 மட்டுமே**

(சி/741) **- நியூகோ நிறுவன உரிமையாளர்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்நெறி விழா - 1997

## 1996-ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட சிறந்த இந்துசமய நூல்களுக்குப் பரிசளித்தல்

1996 ஜனவரி 1ஆம் திகதி முதல் 1996 டிசம்பர் 31 ஆம் திகதி வரையுள்ள (இரண்டு தினங்களும் உட்பட) காலப்பகுதியில் வெளியிடப்பட்டனவும், இந்துசமயம் பற்றியனவுமான நூல்கள் மதிப்பீடு செய்யப்பட்டுத் தகுதி வாய்ந்த நூல்களின் ஆசிரியர்களுக்குப் பரிசில் வழங்கப்படவுள்ளன.

பரிசுத் தேர்வில் பங்குகொள்ள விரும்புவோர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் நூலில் ஐந்து பிரதிகளையும் அஞ்சல் மூலம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர். (அல்லது நேரடியாகவும் சமர்ப்பிக்கலாம்).

விண்ணப்பங்களுடன் நூல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித்தினம் ஜூன் மாதம் 30 ஆம் திகதியாகும் என்பதனைக் கவனத்திற் கொள்ளவும்.

திருமதி இராஜலெட்சுமி கைலாசநாதன்,
பதில் பணிப்பாளர்,
இந்துசமய, கலாசார
அலுவல்கள் திணைக்களம்.

98, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07

# அருள்நெறி விழா - 1997

## இந்துசமய நூற்பரிசுத்தேர்வு (1996)

### விண்ணப்பப் படிவம்

01. நூலின் பெயர்:-
02. நூலாசிரியரின் பெயர்:-
03. தற்போதைய முகவரி:-
04. நிரந்தர முகவரி;-
05. நூல் பதிப்பிக்கப்பட்ட நாடும், அச்சக முகவரியும்:-
06. நூல் வெளியிட்ட வருடம்:- மாதம்:- திகதி:- நூலின் விலை:-

இந் நூல் முதற் பதிப்பு என்பதனையும், இந் நூலின் பகுதிகள் ஏற்கனவே வேறு நூல்களில் இடம் பெறவில்லை என்பதனையும், இந்நூல் வேறு எந்தத் தலைப்பிலேனும் ஏற்கனவே வெளிவரவில்லை என்பதனையும் நூல் முழுமையும் தனி ஒருவராகிய என்னால் எழுதப்பட்டது என்பதனையும் தெரிவிப்பதுடன்,

மேலே தரப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவையென்றும், போட்டி விதிகளுக்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:-

.............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

(சி-745)

## அடுத்த கட்ட நிவாரணம்

உரும்பிராய், மே 20

மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அடுத்த கட்ட நிவாரணத்துக்குரிய முத்திரைகள் இன்னும் வந்து சேராததனால், கிராமசேவை உத்தியோகத்தர்கள் வழங்கும் பட்டியலின் அடிப்படையில் பொருள்களை விநியோகிக்கக் கோப்பாய் பிரதேச செயலகம் ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதற்குரிய பெயர்ப்பட்டியல்கள் ஏற்கனவே கிராம சேவை உத்தியோகத்தர்களிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. (ஐ-154)

## அதிபர்கள் விவரம் சேகரிப்பு

குருநகர், மே 20

உலக வங்கி நிறுவன உதவி மூலம் தேசிய கல்வி நிறுவனத்தில் அதிபர் தரம்2 அதிபர் தரம்3 என்பவற்றுக்கு நடத்தப்பட்ட முகாமைத்துவப் பயிற்சியில் கலந்து கொண்ட அதிபர்களின் விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் சகல கோட்டக்கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர்களையும் கோரியுள்ளார். (ஐ-51)

## சீருடை விநியோகம்

தென்மராட்சி கல்விக்கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைப் பொதிகள் நேற்று அனைத்துப் பாடசாலைகளிலும் வைபவ ரீதியாக வழங்கப்பட்டன.

பளைக் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான இலவச சீருடைப் பொதிகள் வழங்கும் வைபவம் பளை மத்தியகல்லூரியில் கோட்டக் கல்வி அலுவலர் அ. கைலாய பிள்ளையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

# கூட்டணி தலைமையில் மாற்றம் வருமா?

கொழும்பு, மே 20

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையில் மாற்றம் கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பாக இரகசியப் பேச்சுக்கள் இடம் பெற்று வருவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது,

தற்போது தலைவராகஇருக்கும் எம். சிவசிதம்பரத்தையும், செயலாளராக இருக்கும் இரா. சம்பந்தரையும் மாற்றி புதிய தலைவராக தந்தை செல்வாவின் மகன் சந்திரகாசனையும், செயலாளராக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தையும் நியமிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாற்றத்தை சில மத சார்பற்ற அமைப்புக்கள் ஆதரிப்பதாகவும் கூறப்பட்டது.

(ஐ-3-150)

## கடும் காற்றினால் வாழைகள் அழிவு

உரும்பிராய், மே 20

சில தினங்களாக வீசும் கடும் காற்றினால் உரும்பிராய், ஊரெழு, நீர்வேலிப் பகுதிகளில் வாழைகள் முறிந்து வீழ்ந்துள்ளன. பிஞ்சுப் பதத்தில் வாழைக்குலைகள் நாசமாகியுள்ளன.

சில இடங்களில் மரங்களும் பாறி வீழ்ந்துள்ளன. சில வீடுகளின் கூரைத் தகரங்கள் பிடுங்கி வீசப்பட்டுள்ளன.

(ஐ-154)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் இலங்கையர் வேலாயுதம்

தோற்றம்: 03-11-1921

மறைவு: 30-05-1996

திதி: 20-05-1997

மறைந்தும் மறையாத அன்புத்தெய்வமே! நீங்கள் எம்மைப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் நினைவுகளுடன் கலங்குகின்றோம் அப்பா. பார்க்கும் இடம் எல்லாம் நீக்கமறநின்று நினைவலைகள் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகின்றன.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்.
வே. இன்பம் (மகள்)
கலட்டி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(47228)

# ஓராண்டு நினைவினிலே...



## கணேசு தில்லைநடேசன்

(நொதேண் ரயர் வேக்ஸ்)

மலர்வு: 1946-07-24

உதிர்வு: 1996-05-30

திதி: 1997 – 05 – 20

எமது பாசமுள்ள அப்பாவே!
ஆருயிர்த் தெய்வமே!
ஓடி மறைந்ததுவோ ஓராண்டு...
எமக்கு வாய்விட்டுக் கதறவார்த்தைகள்
இல்லையப்பா...
இறுதிவரை எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என்று நம்பினோம்;
காலனுக்கு என்ன கண் இல்லையோ உம்மை
அழைக்க
பிள்ளைகள் நாம் ஏங்கித்தவிக்கிறோம்
உங்கள் அன்புக்காக...
அப்பா அப்பா என்று கவலையுடன்
ஓராண்டை கழித்தபடி எம்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திகின்றோம்.

உங்கள் பிரிவால் துயரும்:
மனைவி, பிள்ளைகள், தந்தை,
சகோதரர்கள்.

2 ஆம் ஒழுங்கை,
சச்சாய் றோட், சாவகச்சேரி.

(47015)

தில்லையம்பதியாள் துணை

கோண்டாவில் தில்லையம்பதி

அருள்மிகு

ஸ்ரீ சிவகாமி அமபாள் திருக்கோயில்

# சிவகாமி அம்மன் பக்திப் பாமாலை

# 2ஆவது ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா



நல்லை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன்

காலம்:- 21-05-97 புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு

இடம்:- திருக்கோயில் முன்றில் நடைபெறும்.



பாடல்கள்
கவிமாமணி
பிரம்ம ஸ்ரீ ந. வீரமணி ஐயர்
அவர்கள்



பாடியவர்
கலைமாமணி
டாக்டர்
ரி. எம். சௌந்தரராஜன்
அவர்கள்

இசை: ரி. எம். சௌந்தரராஜன்

இவ்விழாவில் அறிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- பரிபாலன சபை

(47037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நல்ல இனப்பசுமாடு 15-5-97இல் பசுக்கன்றுஈன்று உள்ளது உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; பே. கணேசலிங்கம், 233/5, கோயில் வீதி, நல்லூர். [47024]

**சோதிடம்**

சாதகக் குறிப்புகள் எழுத எதிர்கால வாழ்க்கை வசதிகள் சிறப்புகள் பற்றி ஆராய திருமணப்பொருத்தங்கள் பார்க்க சிவா சோதிடம். 158, கோயில் வீதி. முடமாவடி நல்லூர், யாழ்ப்பாணம். [46996]

**பெற்றுக்கொள்ளவும்**

சாவகச்சேரி இந்துமகளிர் கல்லூரி அருகாமையில் சிறுதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர் தகுந்த ஆதாரம்காட்டி பெற்றுக் கொள்ளவும். செல்வநாயகம் சிவராம், கேரதீவு வீதி, நாவற்குழி, கைதடி. [47019]

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 20

வட இலங்கை சங்கீத சபையின் ஆசிரியர் தரப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 8 30 மணி முதல் யாழ் இந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ் வலயம்—1 பணிப்பாளர் சு இரத்தினராசா தலைமையுரை ஆற்றுவார். (ஐ)

## மகப்பேற்று நிலையம்

கொழும்புத்துறை, மே 20

யாழ். மாநகர சபையின் ஆதரவில் கண்டிவீதி அரியாலையில் செயற்பட்டுவரும் மகப்பேற்று நிலையம் மாதத்தில் 1 ஆவது, 3 ஆவது, புதன்கிழமைகளில் காலை 8 மணி முதல் இயங்கும் என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

---

உ

முருகன் துணை

**கோண்டாவில் கிழக்கு**

அருள்மிகு

## ஸ்ரீ ஞானப் பழனி முருகன் ஆலய தேர்ப் பெருவிழா

சிறப்புற முருகனின் ஆசி வேண்டுகின்றோம்.

ஆலய வாகனங்களிற்கான வர்ணப்பூச்சு, சுவாமிப் படங்கள் வரைதல், விளம்பரப் பலகைகள் மற்றும் சகலவிதமான எழுத்தோவியங்களும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு;
**S. லிங்கம்**
**சுயா ஆட்ஸ்**

வன்னியசிங்கம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

(47031)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி

### வைத்தியநாதன தங்கலட்சுமி

தோற்றம்: 27—10—1946 மறைவு: 21—04—1997

வல்வெட்டியம்பதியைச் சேர்ந்த திரு. இராசா மனோன்மணி தம்பதிகளின் கனிஸ்ட புதல்வியும், வைத்தியநாதன் (நீலகண்டன்) அவர்களின் அன்பு மனைவியும் ஆகிய திருமதி வை. தங்கலட்சுமி (மல்லிகா) அவர்களின் 31 ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 21-05-97 (புதன்கிழமை) நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின்
**பெற்றோரும், கணவரும்.**

மருதவளவு,
இந்து கலவன் பாடசாலை வீதி,
வல்வெட்டி.

(சி/744)

---

உ


சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான வருடம் வைகாசி மாதம் 8 ஆம் நாள் 22-05-1997 வியாழக்கிழமை முற்பகல் 9. 45 மணி முதல் 11. 25 மணி வரையிலான சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**பகீரதன்**
[தேசிய சேமிப்புவங்கி,
யாழ்ப்பாணம்]
அவர்களுக்கு



எமது புத்திரி
திருநிறை செல்வி
**அருந்ததி**
[தேசிய சேமிப்புவங்கி,
சுன்னாகம்]
அவர்களை

மானிப்பாய், மெமோறியல் ஆங்கில பாடசாலை ஒழுங்கையில் உள்ள மணமகளின் இல்லத்தில் திருமணம் செய்ய எல்லாம் வல்ல இறைவனின் திருவருட் கிருபையுடன் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம்.

வரவேற்புபசாரம்:- மணமகள் இல்லம் 24 / 05 / 97 சனிக்கிழமை.
பிற்பகல் 3. 00 மணி

தங்கள் நல்வரவை நாடும்,

திரு திருமதி
**நடராசா குடும்பத்தினர்,**
பன்னாலை, தெல்லிப்பழை

திரு. திருமதி
**சண்முகநாதன் குடும்பத்தினர்,**
மெமோறியல் ஒழுங்கை,
மானிப்பாய்.

★ இரு வீட்டார் அழைப்பு ★

(47034)

---

உ

அருள்மிகு

## நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி கோயில் இரதோற்சவ தெய்வீக இசையரங்கு

**21-05-97 புதன்கிழமை காலை 9.00 மணியளவில் தேர்ப் பவனி ஆரம்பமாகும்.**

**தொடர்ந்து 10.30 மணியளவில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருக்கையில்**

தெய்வீக இசையரங்கு இடம்பெறவுள்ளது.

| | | |
|---|---|---|
| பாட்டு | : | திரு. S. பத்மலிங்கம் |
| வயலின் | : | திரு. R. ராதாகிருஷ்ணன் |
| மிருதங்கம் | : | திரு. M. சிதம்பரநாதன் |
| தபேலா | : | திரு. K. முருகையா |
| முகர்சிங் | : | திரு. S. ராஜா |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர்.**

(சி/747)

---

உ

சிவமயம்

## சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

நடத்தும்

## வருடாந்த (1997) வைகாசிப் பெருவிழா

**காலம்:** 21 - 05 - 97 புதன்கிழமை
முற்பகல் 8.00 மணி தொடக்கம் நண்பகல்
1. 00 மணி வரை

**இடம்:** சந்நிதியான் ஆச்சிரமம்

ஸ்ரீலஸ்ரீ
சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் ஆசியுடன்

தபாலதிபர்
**திரு. சு. திருப்பரங்கிரிநாதன்**
தலைமையில் (பேரவைத் தலைவர்)

ஆசியுரை: பேரவையின் போஷகர்கள்

மங்கள இசை: எல். எஸ். ஜெகநாதன் குழுவினர்

பிரதம விருந்தினர்: சுவாமி சித்ருபானந்தா
(ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை)

சிறப்பு விருந்தினர்கள்:

வைத்தியகலாநிதி: சி. கதிரவேற்பிள்ளை
(மந்திகை) (D.M.O)

திரு. சி. முருகேசம்பிள்ளை
(ஓய்வுபெற்ற உ. அ. அதிபர்)

திரு. நா. மகேந்திரம்
(உதவித் திட்டப் பணிப்பாளர், பருத்தித்துறை)

சிறப்புச் சொற்பொழிவு:

### ★ ஆறுமுகமான பொருள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப் பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)

தெய்வீக இசைச் சொற்பொழிவு:

### ★ மானம் காத்த கண்ணன்

நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு,
கான கதாவாரிதி, முத்தமிழருவி
கந்தர்மடம்
பிரம்மஸ்ரீ
**சிவ. வை. நித்தியானந்த சர்மா**

### பக்க வாத்தியம்

பிரம்மஸ்ரீ S. சர்வேஸ்வரசர்மா - வயலின்
வித்துவான் P.S. பிச்சையப்பா - முகவீணை
வித்துவான் T. ராஜன் - மிருதங்கம்

செயலாளர் நன்றியுரை:

பேரவையினர்,
தொண்டைமனாறு.

(சி/746)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## முடிவு என்னவாகும்?

''ஜெயசிகுறு'' இராணுவநடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் ஒரு வாரம் முடிவடைந்துவிட்டது. 'வெற்றி உறுதி' என்ற இந்தப் போர் நடவடிக்கை அதன் இலக்கை அடையும் வரை தொடரும் என்று இராணுவத் தளபதி தெரிவித்திருக்கிறார்.

இராணுவத்தினரைப் பொறுத்தளவிலும், விடுதலைப்புலிகளைப் பொறுத்தளவிலும் அவர்கள் இந்தப் பெரும் போருக்குத் தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டவர்கள். ஆனால் வன்னிப் பிரதேச மக்களும், பெருநிலப்பரப்புக்கு வலிகாமத்தில் இருந்து இடம் பெயர்ந்து இடர்படும் மக்களும்இத்தகைய பெருஞ்சமரின்பாதிப்பினால், கொடுமையினால் தமது வாழ்க்கை நிர்மூலமாகிவிடுமோ என்ற மன ஏக்கத்துடன் இருந்தார்கள். அரசு இந்தப் போரை நடத்தாமலேயே இருந்துவிடக் கூடாதா என்று மனதுக்குள் பிரார்த்தித்தார்கள்.

சந்திரிகா — ரணில் இணக்கப்பாடு, விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று பல தரப்புகளிலும் இருந்து எழுந்த வலுவான கோரிக்கைகள் ஆகியவற்றைக் கண்டு இப்போது நடைபெறும் பெரும் போரை அரசு நடத்தமாட்டாது என்று நம்பியிருந்தவர்களும் உண்டு.

இம்மாத இறுதியில் அதிகாரப் பரவல் திட்டம் உள்ளடங்கலாக அரசமைப்புத் திருத்தச் சட்ட நகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் பீரிஸ் வேறு விளாசித் தள்ளியிருந்தார்.

ஆனால் பெரும் போரை அரசு தொடங்கிவிட்டது. போர் நடத்தப்படும் பகுதி தமிழ் மக்கள் வாழும் பிரதேசம் என்பதனாலேயே, அவர்களது அவலங்களைச் சிறிதும் மனதில் கொள்ளாமல் அரசு இந்தப் பெரும் போரைத் தொடக்கி உள்ளது என்றே கருத வேண்டி உள்ளது.

அரசியல் தீர்வு ஒன்றை நாடி நிற்கும் அரசு, இத்தகைய பெரும் போரை நடத்தி மக்களையும், உடைமைகளையும், காடு போன்ற இயற்கை வளங்களையும் அழித்து ஒழித்து விடுவதற்கு முனைந்தது ஏன்?

தமிழ் மக்களின் நலன்களை விட, அரசியல் தீர்வைக் காண்பதனை விட, தனது இராணுவ பலத்தைக் காட்டுவதிலும் அதனை முன்னெடுப்பதிலுமே அரசு அக்கறையாக உள்ளது என்ற தர்க்கவியல் முடிவுக்கே எவரும் வருவர்.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான 77 கிலோ மீற்றர் நீளப் பாதையையும் அதனை அண்டிய பிரதேசங்களையும் கைப்பற்றுவதன் மூலம், அரசு தனது இராணுவ மேலோங்கித் தனத்தை வெளிப்படுத்தி—

தான் நினைத்த ஓர் அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் மீது திணிக்க உத்தேசித்துள்ளது என்று சொல்லப்படுவதை ஊர்ஜிதம் செய்வதாகவே — இந்தப் பெரும் போர் தொடக்கப்பட்டிருக்கிறதா?

போரினூடு சமாதானம் என்பது இப்படி ஒரு முடிவில் தான் போய் நிற்குமோ!

# கொட்டும் மழையில் காடுகளுக்குள் பல மைல் தூரம் செல்லும் மக்கள்

## வன்னி நிலைமை குறிதது புலிகள அறிக்கை

வவுனியா, மே 20

போக்குவரத்துக்கான வசதிகள் எதுவும் இல்லாத நிலைமையில், சைக்கிள்களிலும், மாட்டு வண்டில்களிலும் மக்கள் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல், அடர்ந்த காட்டுக்குள் பாதுகாப்புத் தேடி பல மைல் தூரம் நகர்கின்றனர்.

வன்னி நிலைமை குறித்து விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினர் மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்கள் காரணமாக தமிழ் மக்களுக்கு பாரியசேதங்கள் ஏற்பட்டுவருகின்றன.

பெரும் எண்ணிக்கையான அகதிகள் வீட்டைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர்.

குண்டுத்தாக்குதல்கள் காரணமாக ஆயிரக் கணக்கானோர் வீடுகளை இழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் இடுப்பில் குழந்தைகளைக் காவிக் கொண்டு, முடிந்தளவு பொருள்களைத் தலையில் சுமந்தவாறு ஓட்டமும் நடையுமாகச் செல்கின்றனர்.

இவர்கள் உணவோ, மருந்தோ, இருப்பிடவசதியோ எதுவுமே இல்லாத நிலைமையில் மிகுந்த அவலங்களை எதிர் நோக்குகின்றனர் —

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

# கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 20

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று பயணிகள் கப்பல் சேவை நடைபெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்தது.

இன்று கப்பலில் செல்ல பெயர்களைப் பதிவு செய்தவர்கள் இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

# மூடப்படும்

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாளையும், நாளை மறுதினமும் குடா நாட்டில் உள்ள சகல மதுபான நிலையங்களையும், கள் விற்பனை நிலையங்களையும் மூட வேண்டும் என்று வடமாகாண உதவி மதுவரி ஆணையாளர் வீ. துரைராஜா கேட்டுள்ளார். (இ-30)

# கொழும்பிலும் அச்சம்

வவுனியாவிலிருந்து படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதை அடுத்து, தெற்கே தலைநகர் கொழும்பிலும் மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதாக அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

வவுனியா இராணுவ நடவடிக்கைக்கு பழிவாங்கும் செயலாக தலைநகரில் விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படையினர் பேரழிவை ஏற்படுத்தும் தாக்குதல்களை நடத்தக் கூடும் என அஞ்சப்படுகின்றது.

தற்கொலைப் படையணியைச் சேர்ந்த நான்கு பெண்கள் கொழும்பு மற்றும் அதை அண்டிய பகுதிகளுக்குள் ஊடுருவியிருப்பதாக அரசுத் தரப்புச் செய்திகள் கூறியிருப்பதும் மக்கள் மத்தியில் பீதியை அதிகரிக்கச் செய்திருப்பதாக அந்த செய்தி ஏஜென்ஸி மேலும் குறிப்பிட்டது. (உ-3)

# யாழ். ஆஸ்பத்திரிக்கு கியூபா டாக்டர்கள்

யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கியூபா வைத்தியர்களை நியமிக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

பின்தங்கிய பகுதிகளுக்கு கியூபா வைத்திய சேவையின் உதவியைப் பெற்றுக்கொடுக்கும் சுகாதார அமைச்சின் நடவடிக்கைக்கிணங்க இந்த வைத்தியர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர்.

அதேநேரம் — சுகாதார அமைச்சில் இன்று உயர்மட்ட மாநாடு ஒன்று இடம்பெறவிருக்கிறது.

இந்த மாநாட்டில் கலந்துகொள்ள யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் நேற்றுக் கொழும்பு சென்றுள்ளார்.

(இ-3)

### காயமடையும் படையினருக்காக

# தாண்டிக்குளத்தில் சிகிச்சை நிலையம்

கொழும்பு, மே 20

தாண்டிக்குளத்தில் படையினர் தற்காலிக சிகிச்சை நிலையம் ஒன்றைத் திறந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினர் இந்த சிகிச்சை நிலையத்தில் முதலில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் அநுராதபுரம், கொழும்பு வைத்தியசாலைகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். (இ-3)

# ஐ.தே.கவின் தலைமைப்பதவிக்கு அனுராவைக் கொண்டுவர முயற்சி

கொழும்பு, மே 20

ஐ. தே. கவின் தலைமைப் பதவிக்கு அனுரா பண்டார நாயக்காவைக் கொண்டுவர ஐ. தே. கவில் உள்ள ஒரு சாரார் முயற்சி எடுத்து வருகின்றனராம்.

இந்தநிலையில் அனுராவும் ரணிலும் ஹோட்டன் பிளேஸில் உள்ள வீடு ஒன்றில் தனிமையில் சந்தித்து மனம் விட்டுப் பேசினர் என்றும் —

ஐ. தே. க.வின் தலைமைப் பதவிக்கு வரத் தாம் ஆசைப்படவில்லை என்று அச்சமயம் அனுரா ரணிலிடம் தெரிவித்தார் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சந்திப்பின் போது பெரும்பாலான அரசியல் பிரச்சினைகளில் ஜனாதிபதி சந்திரிகாவுடன் ரணில் ஒத்துழைப்பதாக அனுரா குற்றம் சுமத்தினார்.

பெரும்பாலான விடயங்களில் மௌனம் சாதிக்கும் போக்கைக்கைவிட்டு ஐ.தே.க தனிப்பாதையில் செல்ல வேண்டும் என்று அனுரா புத்திமதி கூறினார் என்றும்—

வெளிநாடுகளுக்குப்பயணம் மேற்கொள்வதை இனிக் குறைத்து கட்சிப் பணிகளில் ஈடுபடுவதாக அனுரா ரணிலிடம் தெரிவித்தார் என்றும் —மேலும் கூறப்படுகிறது.

# தமிழ் சுருக்கெழுத்தாளர் நால்வருக்கு நியமனம்

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் சுருக்கெழுத்தாளர் போட்டிப் பரீட்சையில் சித்திபெற்று, யாழ். செயலகத்தில் நடைபெற்ற அவர்களுக்கான நேர்முகப் பரீட்சையில் சமுகமளித்த பின்வருவோர்களுக்கான நியமனக் கடிதங்கள் தயாராக உள்ளன என்றும் —

இவற்றினை செயலகத்தில் அரசாங்க அதிபரது உதவியாளரிடம் பெற்றுக்கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார்.

★ செல்வி. எஸ்.கலையரசி —58/5, பழையபுகையிரத நிலையவீதி, கொக்குவில் கிழக்கு.

★ செல்வி.பி. மரீனா — உரும்பிராய் கிழக்கு,

★ செல்வி.பி. குமுதினி— 153, 3ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்,

★ செல்வி. ஆர் சத்தியா— பொன்கந்தையாலேன். நெல்லியடி,

பின்வரும் பரீட்சார்த்திகளுக்கு நீதி சேவை ஆணைக்குழுவினால் நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது, இவர்களை நீதி சேவை ஆணைக்குழுவுடன்தொடர்பு கொள்ளுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

★ செல்வி. ஏ. ஜெயந்தி— துரையன் செம்பாடு, வல்வெட்டித்துறை.

★ செல்வி. எஸ். தமயந்தி —மே/பா. பி.சுப்பிரமணியம், 'இந்திரப்பிரஸ்தம்', சுன்னாகம்.

★ செல்வி. எஸ்.தயாளினி —'அம்பிகை வாசம்', உடுவில் கிழக்கு.

(ஐ)

# மேலும் சில இடங்களுக்கு மின்சாரம் வழங்க ஏற்பாடு

கொடிகாமம், மிருசுவில் பகுதி மக்களுக்கு மின்சாரம் வழங்க நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாக மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொடிகாமம் சிகிச்சை நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள 85 கே. வி. ஜெனரேட்டர் மூலம் இந்த மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது.

அதே வேளை—அரியாலை, பருத்தித்துறைப் பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள புதிய ஜெனரேட்டர்கள் மூலம் நாளை மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மின்சாரசபை அதிகாரி தெரிவித்தார். (இ-3)

# மேலதிகமாக தேவைப்படும் பணம் பாதுகாப்பு வரி மூலம் பெறப்படும்

கொழும்பு, மே 20

''அதிகரித்து வரும் பாதுகாப்பு செலவீனங்களுக்கான பணத்தை உப—மான்ய பிரேரணை மூலம் அரசு திரட்டமாட்டாது.''

இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ்'த ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கடந்த வரவு — செலவுத் திட்டத்தில் பாதுகாப்புக்குத் தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாகத் தேவைப்படும் நிதி தேசிய பாதுகாப்பு வரி மூலம் பெறும் நிதியில் இருந்து பெறப்படுகின்றது. தற்சமயம் நடைபெறும் யுத்தம் [illegible] ததும் பாதுகாப்பு [illegible] அறவிடப்படும் 4.5 சதவீதம் நிறுத்தப்படும்—

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-150-3)

## நாளை

**வைகாசி 7**

**புதன்கிழமை**

திதி: சதுர்த்தசி பிற்பகல் 3.17 வரை.

நட்சத்திரம்: சுவாதி காலை 6.39 வரை.

வைகாசி விசாகம்

சுபநேரம்: 4. 22 - 6.52

ராகுகாலம்: 11.52 - 1.22

(பகலுக்கும் இரவுக்கும் [illegible])

### யாழ். மாவட்டத்தில்

# பம்பாய் வெங்காய செய்கை மும்முரம்

வலிகாமம் தெற்கு, மே 20

யாழ்ப்பாணத்தில் பம்பாய் வெங்காயச் செய்கையில் விவ்சாயிகள் தற்போது அதிக ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

இணுவில் பகுதியில் நீண்ட கால இடைவெளியின் பின்னர் இம்முறை பதின்னான்கு தோட்டச் செய்கையாளர்கள் பம்பாய் வெங்காயத்தைப் பயிரிட்டுள்ளனர்.

வெங்காயச் செய்கைக்கு வேண்டிய விதை வெங்காயத்தை கமநல சேவை நிலையங்கள் வழங்கியுள்ளதோடு அச்செய்கையாளர்களை ஊக்கப்படுத்தி வெங்காயச் செய்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும் அவ்வப் போது வழங்கி வருகின்றன.

இலங்கை வாழ் மக்களின் பாவனைக்கென ஆண்டு தோறும் சுமார் அறுபதாயிரம் தொன் பம்பாய் வெங்காயம் தேவைப்படுவதாகவும் —

இதில் 40 வீதமான வெங்காயம் தம்புள்ள, மாத்தளை போன்ற இடங்களில் இருந்து பெறக்கூடியதாக இருப்பதாகவும்—

மிகுதி வெங்காயம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டி இருப்பதாகவும் விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்தில் அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலும் இம்முறை பம்பாய் வெங்காயச் செய்கையில் பல விவசாயிகள் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயம் அடையும் படையினருக்கு

# அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிப்பதில் சிக்கல்

## 500 பைந்து இரத்தம் வரையே சேமித்து வைக்க வசதி

கொழும்பு, மே 20

''அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் 500 பைந்து இரத்தம் மட்டுமே சேமித்து வைக்க வசதி உள்ளதால், ''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் காயமடையும் படையினருக்கு சிகிச்சை அளிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.''

அனுராதபுரம் ஆஸ்பத்திரி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை மேற்கண்டவாறு செய்தி வெளியிட்டுள்ளது.

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் காயமடைந்த 350 படையினர் அனுராதபுரம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படடிருந்தனர்.

கடும் காயத்துக்குள்ளானவர்கள் கொழும்பு மத்திய ஆஸ்பத்திரி, இராணுவ ஆஸ்பத்திரி ஆகியவற்றுக்கு மாற்றப்பட்டதையடுத்து, தற்சமயம் 50 முதல் 75வரையிலான படையினரே அங்கு உள்ளனர்.

காயம் அடையும் படையினருக்காக தினமும் கொழும்பில் இருந்து 50 முதல் 100 பைந்து இரத்தம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுவருகிறது.

அடுத்த சில தினங்களில் கூடுதலானவர்கள் காயமடையலாம் என்பதால் சகல வார்ட்டுக்களையும் தயார் நிலையில் வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை —அனுராதபுரம் வைத்தியசாலையில் பொதுமக்களுக்கான சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்றும்—

பொதுமக்களை வார்ட்களில் அனுமதிப்பது நிறுத்தப்பட்டுள்ளது என்றும்—

அங்கு வரும் பொதுமக்களில் அவசர சிகிச்சை தேவைப்படுவோர் கண்டி வைத்தியசாலைக்கு அனுப்பப்படுவதாகவும் — தெரிவிக்கப்பட்டது – (இ-3-150)


## தளபாடங்கள் விற்பனைக்கு

முற்றிலும் மறுசீர் அமைக்கப்பட்ட தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

**"DON CAROLIS"**

ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட

கட்டில்கள், தரத்தில் உயர்ந்த SETTEE SETS, DINING TABLES, கழற்றிப்பூட்டக் கூடிய முதிரை அலுமாரிகள், உருக்கு அலுமாரிகள், மேசைகள், முதிரை மர பின்னல் கதிரைகள், மின் விசிறிகள், SHOW CASE, மீன்தொட்டி, FRIDGE போன்ற இன்னும் பல தளபாடங்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**609, நாவலர் வீதி**

கைலாசபிள்ளையார் கோயில் அருகில்,

யாழ்ப்பாணம்.

(47040)



## பூபாள ராகங்கள் - 1997

யா/ கம்பர்மலை

அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் 05-04-97 அன்று நடைபெறவிருந்து ஒத்திவைக்கப்பட்ட ''பூபாள ராகங்கள்'' என்னும் நிதியுதவிக் கலை நிகழ்வு எதிர்வரும் 22-05-97 வியாழக்கிழமையன்று நடைபெறவுள்ளது என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

விழா அமைப்புக் குழு

பழைய மாணவர் சங்கம்

யா/ கம்பர்மலை அ. த. க. பாடசாலை

(47018)


## மரண அறிவித்தல்

### செல்வி அனுஷா பத்மநாதன்

சுண்டுக்குளி விதானையார் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வி அனுஷா பத்மநாதன் நேற்று (19 - 05 - 97) காலமாகிவிட்டார்.

இவர் பத்மநாதன் (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) ராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், அனுராஜ் (லக்சலா), காந்தராஜ் (உதயன் நிறுவனம்), கவிதா, பிரமிளா (மாணவி, யாழ். கொ. இ. ம. வித்.), வசுமதி, சிவகுமாரன் (கனடா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், செல்லையா சின்னம்மாவின் பேர்த்தியும், சின்னத்துரை — பூமணி ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20-05-97) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 00 மணியளவில் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
இ. பத்மநாதன்
(தந்தை)

இல. 22/6, விதானையார் வீதி,
சுண்டுக்குளி.

(47046)


மேலும் மரண அறிவித்தல்கள்
2 ஆம் பக்கத்தில்



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.


## ஓமந்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

மோதல் ஒரு மணி நேரம் இடம்பெற்றதாகவும்—

துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் வவுனியா நகருக்குக் கேட்டதாகவும்— மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் கடந்த 24 மணி நேரத்தில் 8 படையினர் கொல்லப்பட்டதாகவும், 29 படையினர் காயமடைந்ததாகவும் நேற்று நண்பகல் கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (இ-3-21-164)

## படை...

(முதலாம் பக்கத் தொடர்)

நடவடிக்கை ஆரம்பிக்க முன்னர்வவுனியாவுக்கு வியாபார நோக்கத்துக்காக வந்து வன்னிக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ள சுமார் ஆயிரம் பேரை மன்னார் பாதையூடாக அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக, இவர்களின் விவரங்கள் நேற்று வவுனியா செயலகத்தில் பதிவு செய்யப்பட்டன. (இ-3)

## அடுத்த...

(முதலாம் பக்கத் தொடர்)

ஒன்று தெரிவித்தது.

கைப்பற்றிய இடங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் நேற்று ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே சமயம் காயம் அடைந்த படையினரில் 334 பேர் பொறி வெடி மற்றும் மிதிவெடிகளில் சிக்கிக் காயமடைந்தனர் என்றும் —

காயம் அடைந்தவர்களில் 120 பேர் ஆபத்தான நிலையில் கொழும்பு மத்திய ஆஸ்பத்திரியிலும், இராணுவ ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் ரி. என். எல். தொலைக்காட்சி தெரிவித்தது.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்)

கின்றனர் என்றும் அப்பத்திரிகை தெரிவித்தது.

அதேசமயம் எதிர்பார்த்ததை விட கடும் எதிர்ப்பை விடுதலைப் புலிகளிடமிருந்து படையினர் எதிர்நோக்குவதாகவும் —

இராணுவம் திட்டமிட்ட வேகத்தில் முன்னேற முடியாது போனதற்கு புலிகளின் பலத்த எதிர்ப்பே காரணம் என்றும் — 'சண்டே ரைம்ஸ்' இராணுவ ஆய்வாளர் இக் [illegible] தெரிவித்தார். ([illegible] 150-3)

## புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்

# ரூபாக்கோ கம்பனிக்கு எதிராக வழக்கு

கொழும்பு, மே 20

புகைப் பிடித்ததால் புற்று நோய்க்குள்ளானார் என்று கூறப்படும் 70 வயது தையல்காரரான கே. எஸ். பெரேரா என்பவர் சிலோன் ரூபாக்கோ நிறுவனத்துக்கும் இங்கிலாந்தில் இயங்கும் அதன் தலைமை நிறுவனத்துக்கும் எதிராக 25 லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

புகையிலையால் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக புகையிலை நிறுவனம் ஒன்றுக்கு எதிராக இலங்கையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது இதுவே முதல் சம்பவம் ஆகும். (இ-10)

## வெள்ளவத்தையில் தேடுதல்

கொழும்பு, மே 20

வெள்ளவத்தைப் பகுதி நேற்று படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

இத்தேடுதலில் 5பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் 2 பேர் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று — கடந்த ஞாயிற்றுக்கிழமையும் வெள்ளவத்தைப் பகுதியில் தேடுதல் இடம்பெற்றது.

கொழும்புக்குள் தற்கொலைக் குண்டுதாரிகள் வந்துள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்தே இத்தேடுதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கொக்குவில் பகுதியில் மோதல்

யாழ்ப்பாணம், மே 20

நேற்றுக் காலை 11 மணியளவில் கொக்குவில் — ஆனைக்கோட்டைப் பகுதியில் தேடுதலில்ஈடுபட்டிருந்த படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றதாகத் தெரியவந்தது.

அப்பகுதியில் சரமாரியாக இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது.

இச்சம்பவத்தின் பின்னர் இறந்த மூவரின் சடலங்களை படையினர் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர் என்று தெரியவந்தது.

ஆனால் இதனை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. (இ-3)

## ஆசிரியர் சம்பளம்

குருநகர், மே 20

இம்மாதத்துக்குரிய ஆசிரியர் சம்பளத்தை வழங்குவதற்குரிய கட்டுநிதி யாழ். கல்வித்திணைக்களத்துக்கு நேற்றுக் கிடைத்துள்ளது.

இதனால் ஆசிரியர் சம்பளம் இன்று வழங்கப்படும் என யாழ். கல்வி வலயம் 1 இன் தகவல் மூலம் தெரிய வருகிறது. (இ-51)

## சாந்த தலைமையில் நடவடிக்கை

கொழும்பு, மே 20

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினரில் ஓமந்தை நடவடிக்கைக்கு பிரிகேடியர் சாந்த கொட்டகொட தலைமை வகிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

ஓமந்தை நடவடிக்கையில் 55 ஆவது படையணி ஈடுபட்டுள்ளது. (இ-150-3)

## மல்லாகம் சம்பவத்துக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்)

குறித்து, 51 ஆவது படையணிப் பிரிவின் கட்டளைத் தளபதி யாழ்ப்பாண மக்களுக்கு பின்வரும் செய்தியை வழங்க விரும்புகிறார்.

1997 மே 15 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில், படையினர் பயணம் செய்த டிராக்டர் மீது, சுன்னாகத்தில் வைத்து கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதல் ஒன்றை விடுதலைப் புலிகள் நடத்தினார்கள். கிளைமோர் கண்ணிவெடி வெடித்ததில் நான்கு சிப்பாய்கள் அந்த இடத்திலேயே மரணமானார்கள். அதேவேளை நடந்த துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்களில் ஒருவரும் இடையில் அகப்பட்டு மரணமானார். அதனைத் தொடர்ந்து அண்மித்த முகாம் ஒன்றில் இருந்து சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு வந்த சிப்பாய்கள் அப்பகுதியில் வாழும்பொதுமக்களைத் தாக்கியதாக அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக முழுமையான விசாரணை ஒன்று நடத்தப்பட்டு வருகிறது. விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்படுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதோடு உரிய தண்டனையும் வழங்கப்படும். விசாரணைகள் முடிவடையும் வரை, அந்தப் படைப்பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்தவர் அவரது கட்டளைப் பணியில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து நான் அதிர்ச்சி அடைந்துள்ளதோடு பெரும் மனக்கவலையுமுற்றுள்ளேன். இராணுவத்தில் இன்னமும் ஒழுக்கமில்லாதவர்களும், இப்போதைய பிணக்கின் தன்மையைப் புரிந்து கொள்ளாதவர்களுமாகச் சிலர் இருக்கிறார்கள் என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையைக் கொண்டு வரும் பொருட்டு இராணுவத்தைத் துரிதமாக விஸ்தரிக்க வேண்டிய தேவை இருப்பதும் இதற்கு ஓரளவு காரணம் எனலாம். இச்சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணப் பொது மக்களிடமும், குறிப்பாகப் பாதிப்புற்ற அப்பாவி மக்களிடமும் இராணுவத்தின் சார்பில் மிகப் பணிவுடன் மன்னிப்புக் கோருகின்றேன்.

இப்போதுள்ள பாதுகாப்புக் கட்டமைப்புக்கு இணங்க இராணுவம் பொதுமக்களுக்குத் தொடர்ந்தும் உதவும். இந்த நன்னோக்க ஈடுபாட்டிலிருந்து அது வழுவி நடந்து கொள்ளாது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இம் மாதம் 15 ஆம் திகதி இராணுவத்தினர் இரத்த தானம் வழங்கியமை மற்றும் அது போன்ற நிகழ்வுகள் .இத்தகைய நன்னோக்க ஈடுபாட்டுக்குச் சில உதாரணங்களாகும்.

இராணுவம் தனது பணிகளை அர்ப்பணிப்புடன் ஆற்றும் என்பதனையும் யாழ்ப்பாண மக்களைத் தனது இதயத்திலிருத்திக் கடமை புரியும் என்பதனையும் மீண்டும் உறுதி கூறுகின்றேன். யாழ்ப்பாணத்தில் அமைதியையும் இயல்பு நிலையையும் கொண்டுவரும் பணியில் பங்காற்றித் தமது உயிர்களை அர்ப்பணித்த அந்த நான்கு படை வீரர்களுக்கும் எனது அஞ்சலியைச் செலுத்தும் அதே வேளை ஒழுக்கமின்மையை இராணுவம் ஒருபோதும் மன்னிக்கமாட்டாது என்பதனை நான் வலியுறுத்த விரும்புகின்றேன். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-உ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org